**இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையின் (''சபை'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் காண்பித்துள்ள விடயங்களிலான தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் காண்பித்துள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கதயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிக்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 21,995,626 குறைவாகவும், முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சல் ரூபா 48,220,000 குறைவாகவும் சீராக்கப்பட்டிருந்தது. மேலும், சபையின் காசுப் காய்சல் கூற்று தயாரிக்கும் போது பிரதான காசுப் புத்தகத்தின் மீதி மாத்திரம் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்ததுடன் | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் 2024 ஆண்டிலிருந்து காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டது. | நிறுவனத்தின் அனைத்து காசு பெறுவனவுகள் மற்றும் காசு கொடுப்பனவுகள், உள்ளடக்கப்பட்டு காசுப் காய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆராய்ச்சி கருத்திட்டங்களிற்காக நடைமுறை கணக்குகளிற்கு மாற்றப்பட்ட காசுத் தொகையின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று கூட்டுத் தொகை ரூபா 68,108,055 ஆன மீதிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத் தொகை ரூபா 246,532,425 அளவான அமைச்சின் மானியங்களால் ஆரம்பிக்கப்பட்ட 60 ஆராய்ச்சிகள் நிறைவடையாது செய்யப்பட்டுக் கொண்டிருந்ததுடன், அந்த ஆராய்ச்சிகளின் இருந்து கிடைக்கும் எதிர்கால நலன்கள் அபிவிருத்தி பெறுமதியாக இனங்கண்டு நடைமுறை வேலைகளாக (Working Progress) நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படாத மொத்த செலவினம் நிதி செயலாற்றல் கூற்றின் ஊடாக பதிவழித்த காரணத்தால் அந்த நீண்ட கால ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்கு இதுவரை மேற்கொண்டிருந்த செலவுகளிற்கு ஒப்பாக அவற்றின் நிகழ்கால நிலைமையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | ஆராய்ச்சிகளிலிருந்து கிடைக்கும் எதிர்கால பொருளாதார நலன்களை நம்பகத்தன்மையுடன் இனங்காண முடியாததால் அதற்காக செய்யப்படும் செலவினங்களை மேற்கொள்ளப்படும் சந்ர்ப்பத்திளே செலவாக கருதுவது பொருத்தமாகையால் அவை நிதி செயலாற்றல் கூற்றில் செலவு வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே முன்னைய கணக்காண்டுகளிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. | செயற்படுத்திக் கொண்டிருக்கும் கருத்திட்டங்களின் நிதி செயலாற்றுகை நிதிக்கூற்றுகளின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 137 | கொள்வனவு செய்யப்படும் பொருட்களிற்கு கொடுப்பனவு செய்யும் போது பொருட் பெறுவனவு குறிப்பு மூலம் (GRN) உறுதி செய்து கொண்ட பின்னர் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதும், திட்டங்களிற்காக செய்யப்பட்ட ரூபா 50,166,237 கொள்வனவுகளிற்கு முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் மீது ஆராய்சிகளின் ஊடாக இடப்படும் குறிப்பொன்றின் மீது மாத்திரம் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையினால் வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான பெறுகைகள் நடவடிக்கைகள் ஆராய்ச்சி மானியங்களுக்கு ஏற்றவாறு தேசிய ஆராய்ச்சி சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள, ஆராய்சி வழிகாட்டிக்கு இணங்க ஆராய்சி நிறுவனத்தின் அங்கீகாரத்தின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே ஆராய்ச்சி நிறுவனத்தினால் எடுக்கப்படும் | நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கான உரிய உறுதிப்படுத்தல்களை செய்து கொண்ட பின்னர் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | பெறுகைகள் தீர்மானங்கள் தேசிய ஆராய்ச்சி சபையின் பெறுகை குழுவினாலும் ஆய்வு செய்யப்பட்டு பின்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,998,779 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 172,111 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,170,889 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு, மீண்டெழும் கிடைப்பனவு ரூபா 56,681,722 இனால் குறைந்திருந்த போதும் ஏனைய கிடைப்பனவுகள் ரூபா 11,488,253 இனால் அதிகரித்தமை மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவுகள் ரூபா 51,998,881 இனால் குறைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய ஆராய்ச்சி சபையினால 2020 மற்றும் 2022 ஆண்டுகளில் நிறைவு செய்யவிருந்த கிரயம் ரூபா 14,588,238 ஆன 05 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. கருத்திட்டங்கள் முடிவடைந்த 3 மாதங்களுக்குள் சபைக்கு இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருத்திட்ட வழிகாட்டிகளில் குறிப்பிட்டுள்ள போதும், பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சி கருத்திட்டங்களின் அறிக்கைகள் கணக்காய்வு திகதிய 2024 ஜூன் 25 திகதி வரை ஒப்படைத்திருக்கவில்லை. | ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகள் தாமதம் மற்றும் கிடைக்காமை தொடர்பாகவும், அந்த நிறுவனங்களிற்கு எதிர்காலத்தில் கிடைக்க இயலுமான தேசிய ஆராய்சி சபையின் கருத்திட்ட மானியங்களிற்கு பாதகமான தாக்கம் ஏற்பட முடியுமெனவும், பிரதான ஆராயச்சியாளரின் நிறுவனத் தலைவருக்கு அறிவுருத்தவும், இறுதி அறிக்கையை வழங்காத பிரதான ஆராயச்சியாளர்களிற்கு மீண்டும் தேசிய ஆராய்ச்சி சபையின் கருத்திட்ட மானியங்களை பெற்றுக் கொள்ள முடியாதவாறு இயலாதோருடன் கறைநிரற்பட்டியலில் உள்ளடக்கம் செய்யப்படுமென. | நிறைவு செய்துள்ள ஆராய்ச்சி கருத்திட்டங்களில் இறுதி அறிக்கையை ஆராய்ச்சி வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ளபிரகாரம் உரிய திகதியில் பெற்றுக் கொள்ளக் கூடியவாறான முறைமை ஒன்றை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | ஆராய்ச்சி கருத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க முன்னர் அது தொடர்பாக முன்கூட்டிய சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொண்டு கருத்திட்டத்தை | ஆராய்ச்சி நிறுவனத்தினால் கருத்திட்ட மொத்த பொறுப்புக்களையும் ஏற்பதற்கு அலுவலர் ஒருவர் நிறுவனத்தில் இல்லையென | ஆராய்ச்சிகளிற்காக திறைசேரி மானியங்களைப் பெற்றுக் கொள்ளும் போது |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறைப்படுத்தும் இயலுமையை இனங்காண வேண்டிய போதும் அவ்வாறு செய்யாததால் பொது திறைசேரி மானியம் ரூபா 11,241,250 பெற்றுக் கொண்டு ஆரம்பித்திருந்த 03 ஆராய்ச்சிகள் செயற்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தன. | அறிவித்தலும், ஆராய்ச்சி மாணவர் ஒருவர் இல்லாததால் கருத்திட்டத்தை முடிக்க பிரதான ஆராய்ச்சியாளரினல் கால அவகாசம் கேட்பதும், கொள்வனவுகளிற்காக ஒதுக்கிய தொகை முடிவடைந்துள்ளமை மற்றும் கருத்திட்ட ஆரம்பம் முதலே எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாமை போன்ற விடயங்கள் காரணமாக இந்த 03 கருத்திட்டங்களையும் இடைநிறுத்த நேர்ந்தமை. | முறையான சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை நடத்திய பின்னர் கருத்திட்டங்களை செயல்படுத்தி ஆராய்ச்சிகளின் மூலம் நாட்டுக்கு உரிய நலன்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2022 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யவிருந்த 05 கருத்திட்டங்களுக்காக அமைச்சிலிருந்து ரூபா 12,256,290 வழங்கியிருந்ததுடன், அக் கருத்திட்டங்களிற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 6,928,581 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. கருத்திட்டங்களை திட்டமிட்ட பிரகாரம் முடித்திருக்காததுடன், வழங்கிய நிதியத்திலிருந்து ரூபா 5,327,709 தொகை குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | ஆராய்ச்சிகளை உரிய காலத்தில் நிறைவு செய்ய ஆராய்ச்சியாளர்களை வழிநடாத் துவதற்காக காணப்படும் வேலைத் திட்டங்களை சிறந்த ஒழுங்கு முறைப்படுத்தும் தேவைப்பாட்டை ஏற்றுக் கொண்டமை. | ஆராய்ச்சி கருத்திட்டங்களிற்காக கிடைக்கும் நிதியை மிகவும் ஆக்கபூர்வமான வகையில் முறையான வேலைத் திட்டமொன்றின் ஊடாக கருத்திட்டங்களை செயற்படுத்த தேவையான கட்டுப்பாட்டு முறையொன்றை அறிமுகம் செய்ய வேண்டும். |